3. அறிவிப்புகள்.

(i) ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, ஒற்றிவைப்புத் தீர்மானங்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. சித்தன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. கோதண்டராமன் அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். திரு. இராமமூர்த்தி அவர்கள் இன்னொரு ஒற்றிவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒற்றிவைப்புத் தீர்மானங்கள் எல்லாம் அவை முதல்வரோடு அறையில் பேசி நாளைக்கு நான் முடிவு கூறுகிறேன்.

DR. H. V. HANDE : I am withdrawing my adjournment motion.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்களின் ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

4. கவனஈர்ப்பு.

மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் பஞ்சநிலைமையும், வரி தள்ளுபடியும், கடன் வசூல் ஒத்திவைப்பும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, 41-வது விதியின் கீழ் திரு. ஏ. அ. சுப்பராஜா அவர்கள் ஒரு கவனஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருகிறார்கள்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரமும், பொது முக்கியமுமான காரியம் ஒன்றை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :—

"மேற்கு இராமநாதபுரம் ஜில்லாவில் மழை இல்லாத காரணத்தால் விவசாயம் மிகவும் பாதிக்கப்பட்டு, பஞ்ச நிலைமை ஏற்பட்டு இருப்பதால் நிலவரி வஜா செய்து, சர்க்கார் கடன் வசூல்களை ஒத்தி வைக்கவும், பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்கவும், அஜ்மாஷ் செய்து முடிவு எடுக்கும் வரை எல்லாவிதமான வசூல்களையும் நிறுத்தி வைக்கவும் வேண்டிய அவசியம் பற்றியதான அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்."

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் சீர்கேடான பருவநிலைமைகள் காரணமாக பஞ்ச நிலைமை ஏற்பட்டுள்ளதெனவும் நிலவரியைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்றும், கடன் வசூலை ஒத்தி வைக்கவேண்டும் என்றும், பஞ்சத் தணிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் நாட்ட ஈர்ப்பு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

ஸ்ரீவில்லிப்புத்தூர், சாத்தூர் வட்டங்களையும் இராஜபாளையம் விருதுநகர் துணை வட்டங்களையும் கொண்ட மேற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் 1967-ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் திங்கள்களில் மழை பெய்தது. இதனால் பெரும்பான்மையான ஏரிகளின் ஆயக்கட்டு நிலங்களில் பயிரிடுவதற்கு நீர்வழங்க அவற்றிற்கு நீர் கிடைத்தது. ஆனால்,